உயர்திருவாளர்

அரிசோனா ஜேம்ஸ்கிட்

அவர்கள் வினவிய வினாக்கள் மூன்று

1. உயிர் என்றால் என்ன?
2. அது உடலில் எங்கேயிருந்தது?
3. அது எப்படிப் போயிற்று?

என்ற வினாக்களுக்கு சுருதி, யுக்தி,
அனுபவ பூர்வமாக எழுதியுள்ளது.

இயற்றியவர்:

பிரஹ்ம, நிஸ்ட்ட, பண்டித

சுவாமி நித்தியானந்தா அவர்கள்

வேட்டைக்காரன்புதூர்

[illegible]ா, சென்னை மாகாணம்

உயர்திருவாளர்

அரிசோனா ஜேம்ஸ்கிட்

அவர்கள் வினவிய வினாக்கள் மூன்று

1. உயிர் என்றால் என்ன?
2. அது உடலில் எங்கேயிருந்தது?
3. அது எப்படிப் போயிற்று?

என்ற வினாக்களுக்கு சுருதி, யுக்தி,
அனுபவ பூர்வமாக எழுதியுள்ளது.

இயற்றியவர்
பிரஹ்ம, நிஸ்ட்ட, பண்டித
சுவாமி நித்தியானந்தா அவர்கள்
வேட்டைக்காரன்புதூர்
பொள்ளாச்சித் தாலூக்கா, சென்னை மாகாணம்

5-6


அயம் ஆத்மா பிரஹ்மம்



அஹம் பிரஹ்மாஸ்மி

பிரஹ்ம நிஸ்ட்ட, பண்டித சுவாமி

நித்தியானந்தா அவர்கள்



ஓம் தத் ஸத்

முன் அறிவிப்பு—அவையடக்கம்

அரிசோனு மாநில சுப்ரீம் கோர்ட்டுத் தலைவர் அவர்களுக்கும், மற்றைய சகோதர சகோதரிகளுக்கும், எமது அறிவிப்பு. நமது ஆப்த நண்பர் ஜேம்ஸ் கிட் என்பவர்கள் நாம் யாவரும் துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தை அடைதற்பொருட்டு, அதற்குரிய உயிரினது. இலக்கணமும், அவ்வுயிர் தங்கும் இடமும், அது சென்று போம் வழியும், ஆதாரபூர்வகமாக, சுருதி, யுக்தி, அநுபவரூபமாய்த் தெரிவிப்பவர்களுக்கு, பதினைந்து லட்ச ரூபாய் பரிசாகக் கொடுப்பதாகக் கூறியுள்ளார்கள். ஏனெனின், உயிரினது இயல்பையறிந்தவரே எல்லாம் அறிந்தவராவார். அதனைச் சொல்லுவதற்கும் அருகதையுள்ளவராவார். ஆதலின், அதனை அறியாதவர் கேட்பதற்கே அருகதையுள்ளவராவார்கள். இதனை எமது அருள் வள்ளல், நீலகண்டன் என்னும் நாமமும், மானிட வடிவமுங் கொண்டு வந்து எமக்களித்த மதியின் அளவை கொண்டு சுருதி, யுக்தி, அநுபவரூபமாய்த் தெளிந்து எடுத்த, அமிர்தத் துளிகள் போன்ற இவ்வாக்கியங்களை எடுத்து எழுது

வதற்கு ஊக்குவித்த எல்லாம் வல்ல அருட்பெருஞ் சோதி தனிப்பெருங்கருணை. ஆண்டவனது அருள் வடிவங்கொண்டு இவ்வாக்கியங்களை அறிவித்தனன்.

இங்ஙனம்,
பிரஹ்ம, நிஸ்ட்ட, பண்டித
சுவாமி. நித்தியானந்தா அவர்கள்,
வேட்டைக்காரன் புதூர்
பொள்ளாச்சித் தாலூக்கா
கோவை ஜில்லா
சென்னை மாகாணம்.

திருச்சிற்றம்பலம்

ஆயத்தக்கது வேதத்தின்அந்தம்
ஒயத்தக்கது வேட்கையின்பெருக்கே.

அன்பே சிவம்.

உ

முருகா

தொகுத்துச் சொல்லல்

ஆயத்தக்கது வேதத்தினந்தம்
ஓயத்தக்கது வேட்கையின்பெருக்கே.

மரணப்படுக்கையில் இருக்கும் ஒருவன் இறந்து விட்டால், (1) உயிர் என்ருல் என்ன? (2) உயிர் போய் விட்டது என்று சொல்லுகிரேம். (3) உயிர் உடலில் எங்கே இருந்தது? எப்படி போயிற்று என்பதற்கு ஆதாரபூர்வம் பதில் காண்பிப்பாம்.

1. உயிர் என்ருல் என்ன? பிராணப் பிரஞ்ஞை வடிவமாயுள்ளதே உயிர் என்று சொல்லுவர்!

2. உயிர் உடலில் எங்கே இருந்தது? அந்தப் பிராணப் பிரஞ்ஞை வடிவ உயிரானது, இருதய கமல மாகிய சிதாகாச வெளியில் முக்கியமாயுள்ளது. மற்ரே சரீர முழுதும் கௌணமாயும் உள்ளது. அது நிகநுனி முதல் நாசிகாதிபரியந்தம் வியாபித்துள்ளது. இருதய வெளியில் இருந்து மூக்கின் வழியே வெளிச் சென்று மீளும் கிரியையுடையது.

இவ்வுடம்பிற்கும் உயிர்க்கும் உள்ள சையோக சம் பந்தமே பிறப்பும் அச்சம்பந்த நீக்கமே மரணமும் ஆம் என்றும் பதிநான்கு வித்தைகளுள் ஒன்ருன நியாய சாத்திரமே ஆதாரமாம் அதுவே அநுபவரூபமாம்.

பிராணனது வியாபாரம் சரீரத்தின் கண்ணே எது வரை நிகழ்ந்துகொண்டிருக்குமோ! அதுவரை சம்பூரண

வாக்காதி இந்திரியங்களிடத்தே வசனுதிக் கிரியைகள் நிகழும். பிராணனது வியாபாரம் அடங்கியபோது எல்லா இந்திரியங்களிடத்தும், யாதொரு கிரியைகளும் உண்டாக மாட்டாது.

இவ்வார்த்தை சர்வ உலகரின் அநுபவசித்தமாம். பிராணன் இருப்பின் வாக்கு, கை, பாதம், அபானம், உபஸ்த்தம், தோல், கண், காது, மூக்கு, நா வென்னும் பத்து இந்திரியங்களிடத்தும் ஒவ்வோர் இந்திரியங் களின் வியாபாரமின்றியும் பிராணிகளிடத்துள்ள ஜீவனத்தைக் கண்டோம். பிராணன் இல்லையேல் சம்பூரண இந்திரியங்களும் வியாபாரமின்றியதேயாம் இதுவே அநுபவரூபமாம்.

3. எப்படிப் போயிற்று? வினை காரணமா எடுத் துள்ள உடம்பின்கண் பிராரத்தபோக அநுபவ முடிவில் அதனிடத்தில் உள்ள சைபோக சம்பந்தம் அழிந்து வேறு யாதனு சரீரம் எடுத்து மேலும் கீழுமாய்! உண்மை ஞானத்தை அடையும்வரை உழலும்! இவை பிராணப் பிரஞ்ஞைகளின் தர்மமாம் ஆன்மாவின் தர்ம மன்று. ஆனுல் அவை பிராணப் பிரஞ்ஞைகள் ஆன்மா வின் சொரூபமேயாம் இனி ஆன்மாவின் சொரூபமா வது! ஆயுஷ். அமிருதம் பிராணன் என்பவற்றிற்குப் பரஸ்பரம் பேதமின்ரும் மற்ருே! பிராணனே ஆயுஷ் அமிருத சொரூபமேயாம்.

1-வது அதன் சொரூபமாவது! நாநாப்பிரகார மான கிரியைகளின் காரணம் யானே யாகலின் நான் ஆன்ம சொரூபமாம்!

2-வது பேதமற்ற சுயம்பிரகாச வடிவன் யான் ஆகலின் நானே பிரஞ்ஞை வடிவன்!

3-வது சம்பூரணப் பிராணிகட்கும் ஜீவன கார ணன் ஆகலின் யான் ஆயுஷ் வடிவன்!

4–வது சுயம் பிறப்பு இறப்பு இல்லாதவன் ஆகலின்! யான் அமிர்த வடிவன்! பிராணன்! பிரஞ்ஞை! ஆயுஷ்! அமிருதம் என்பவை ஆன்ம சொரூபமேயாம்!

பிராணனே பிரஞ்ஞை வடிவமாம்! அல்லது உலகப் பிரசித்த வாயுரூபப் பிராணனும் அந்தக்கரணத்தின் விருத்தி வடிவ (விளக்க வடிவ பரிணாம)ப் பிரஞ்ஞையும் வேறு வேறாகத் தோற்றமாட்டா! மற்றோ ஜீவன காலத்தின்கண் சர்வ ஜீவர்களின் சரீரத்தின்கண்ணும் ஒன்றேயே பிராணப் பிரஞ்ஞைகள் லோகாந்தரங்களில் புதிய யாதனா சரீரம் எடுத்து சுழலாநிற்கும்! ஆகையால் பிராணப் பிரஞ்ஞைகள் அபின்னமாம்.

உலகப் பிரசித்தமான பிராணனிடத்தும் பிரஞ்ஞை இடத்தும் கூடப் பேதமில்லாதபோது பிராணப் பிரஞ்ஞை என்னும் சப்தங்கட்கு இலக்ஷியார்த்தமாகிய அலௌகீக அத்விதீய ஆமாவாகிய எனக்கு எக்காரணத்தால் பேதமுண்டாம். மற்றோ அபேதமேயாம் இதுவே வேதத்திலுள்ளதும் எம் ஆராய்ச்சியாலும் அநுபவத்தாலும் உள்ள பொருளாகும்.

இதன் விரிவை இனி சுருதி, யுக்தி, அநுபவ ரூபமாகக் காண்பிப்பாம்.

ஓம்சாந்தி ! ஓம்சாந்தி !! ஓம்சாந்தி !!!

சுவாமி. நித்தியானந்தா,
வேட்டைக்காரன்புதூர்
பொள்ளாச்சித் தலூகா
கோவை மாவட்டம்
சென்னை மாகாணம்

உ

முருகா

விரித்துச் சொல்லல்

அற்றதுபற்று எனில்
உற்றது வீடு.

மரணப்படுக்கையில் இருக்கும் ஒருவன் இறந்து விட்டால், உயிர் போய் விட்டது என்று சொல்லு கிறோம். உயிர் என்றால் என்ன? உயிர் உடலில் எங்கே இருந்தது? எப்படிப் போயிற்று? என்பதற்கு ஆதாரபூர்வமாகப் பதில் எழுதுவாம்.

சம்பூர்ண உபாதிகளைக் காட்டினும் பிராணப் பிரஞ்ஞை வடிவ உபாதிகளிடத்தே அதிகத் தன்மை யைக் காண்பிப்பாம்—

பிராணப் பிரஞ்ஞைகள் இருந்தால் தேகேந்திரியங் கள் நிலையுள்ளது! பிராணப் பிரஞ்ஞைகள் இல்லாவிட் டால் தேகேந்திரியங்கள் நிலைத்தல் இல்லை. இவ் வன்வய வியதிரேகங்களால்! சம்பூர்ண தேகேந்திரிய உபாதிகளின் சாதகத்தன்மை! பிராணப் பிரஞ்ஞை களிடத்தே சித்திக்கும்! ஆகையினால் பிராணப் பிரஞ்ஞை களே சர்வ உபாதிகளினும் மேலானதாம்! இவ்விடத்தே இஃது அபிப்பிராயமாம்! ஏவ்வுபாதியைக் கூறினால் மோட்ச விருப்புடையோர் எளிதாக ஆன்ம ஞானத்தை

அடைவதற்கு முடியுமோ! அவ்வுபாதியை அங்கீகரித்து தத்துவஞானிகள்! ஆன்மாவின் உபதேசம் செய்தல் வேண்டும் என்பதாய நியமும்! பிராணப் பிரஞ்ஞை களிடத்தேயே உள்ளது! ஏனெனின்? எஃதிருந்தால் தேகேந்திரியங்கள் நிலையுள்ளதாமோ எஃதில்லாதிருந் தால் தேகேந்திரியங்கள் நிலையில்லாதனவாமோ என் னும் அன்வய வியதிரேகங்களால் தேகேந்திரியங் களின் கூட்டத்தின் சாதகத்தன்மை! ஆன்மாவின் இலக்கணமாம்! அவ்விலக்கணம் பிராணப் பிரஞ்ஞை களிடத்துச் சம்பவிக்கின்றது! ஆகையினுல் பிராணப் பிரஞ்ஞைகள் ஆன்மாவாம்! இவ்வண்ணம், பிராணப் பிரஞ்ஞைகளிடத்தே மோட்ச விருப்புடையோர்க்கு ஆன்மஞானம் உண்டாகும் இடத்தும் பிராணப் பிரஞ்ஞைகளை நேரே அறிவதற்கு முயல்வியாநிற்பர்! சுத்த ஆன்மாவின்கண்ணும் எளிதாகவே மோட்ச விருப்புடையோர்க்கு ஆன்மஞானமுண்டாம்! கருத்திது வாம்-அதிசூக்ஷும அருந்ததி நட்சேத்திரத்தை அறிந்த ஒருவன் அன்னியன் ஒருவனுக்குக் கதியைக் காட்ட விரும்பின் அருந்ததியின் சமீபத்தில் இருப்பதாய தூல நட்சேத்திரத்தை முன்அருந்ததி வடிவமாய்க் காண் பித்துக் காண்போனுடைய திருஷ்டியானது அத்தூல நட்சேத்திரத்தின்கண் நிலைபெறின் முறையே சூட்சும அருந்ததி நட்சேட்திரத்தின்கண்ணும் அவன் திருஷ்டி சேரும்! அதுபோல—சுத்த ஆன்மாவையறிவிக்கும் பொருட்டுப் பிராணப் பிரஞ்ஞைகளையே ஆன்மரூபமாய் உபதேசிக்க வேண்டும்! அல்லது—பிராணப் பிரஞ்ஞை சப்தங்களின் இலக்ஷணுவிருத்தியால் ஆன்ம ஞானம் அங்கீகரிப்பதில் பிராணப் பிரஞ்ஞைகளுக்கு ஆன்மா வோடு நேரே சம்பந்தம் சம்பவிக்கும் ஆகையினுல் எளிதாம்! தேகேந்திரிய உபாதிகளை அங்கீகரித்து

ஆன்மாவைப் போதிப்பதால் பிராணப் பிரஞ்ஞை வாயிலாய் ஆன்மாவின் ஞானமுண்டாம்.

நேரே ஞானம் உண்டாகமாட்டாது! தேகேந்திரிய பதங்களின் இலக்ஷணவிருத்தியினுல் ஆன்மாவின் ஞானம் அங்கீகரிப்பதில்! தேகேந்திரியாதிகட்கு ஆன்மாவோடு பிராணப் பிரஞ்ஞைவாயிலாய்ப் பரம்பரா சம்பந்தம் சம்பவிக்கும்! நேரே சம்பந்தம் சம்பவியாது. அந்தப் பரம்பரா சம்பந்தம் கௌரவரூப தூஷணத்தோடு கூடியதாம்! ஆகையினுல் பிராணப் பிரஞ்ஞை வடிவ உபாதியை அங்கீகரித்தே ஆன்மாவைப் போதிப்பதுவே இனிமையும் எளிதுமாம். கிரியா சக்தியையுடைய பிராணன் பிரஞ்ஞை இன்றி இராது. ஞான சக்தியையுடைய பிரஞ்ஞையும் பிராணன் இன்றியிராது. எங்குப் பிரஞ்ஞை இன்ருமோ அங்குப் பிராணனும் இன்றியதாம்! ஸ்தாவர விருக்ஷங்களிடத்தே பிரஞ்ஞை வடிவ புத்தி பிரத்தியக்ஷமாய்க் காணப்படுவதின்ரும். ஆகையினுல் பிராணனும் அவ்விருக்ஷாதிகளில் காணக் கிடையாததுபோலவாம். சங்கை—சரீரத்தின்கண்ணே ஆயுதத்தால் காயமுண்டாம் அக்காயம் நீண்டகாலத்திற்குப்பின் கூடிவிடும். அதுபோல விருக்ஷத்தின்கண் கோடரி முதலியவற்ருல் உண்டாகிய காயமும் நீண்ட காலத்திற்குப்பின் கூடிவிடும்! சரீரத்தின் விருத்தியுண்டாவதுபோலத் தருக்களுக்கும் விருத்தியுண்டாம்! ஆகையினுல் காயத்தின் சேர்க்கை வடிவ ஏதுவினுலும் விருத்தி வடிவ ஏதுவினுலும்! விருக்ஷங்களிடத்தே பிராணனது அநுமானம் சம்பவிக்கும்! ஆகையினுல் பிரஞ்ஞை வடிவ புத்தியை விடுத்தும் பிராணன் விருக்ஷங்களிடத்தே இருக்கும் எனக்கேட்கின்! காயத்தின் சேர்க்கை வடிவ ஏதுவினுலும் விருத்தி வடிவ ஏதுவினுலும் விருக்ஷங்களிடத்தே பிராணனது அநு

மானம் சம்பவிப்பதுபோலக் கொடியினது உயர்ந்த இடத்தில் செல் வடிவ ஏதுவினுலும் அதற்குப் பிரஞ்ஞை வடிவ புத்தியின் அநுமானமும் உண்டாதல் கூடும் விருக்ஷத்தின்கண் சூக்கும வடிவமாய்ப் பிராணப் பிரஞ்ஞைகள் இருக்கின்றன என்ருலும் வெளிப்படை யாய் இன்ரும்.

எங்கே பிராணன் இன்ருமோ அங்கே பிரஞ்ஞை யும் இன்ரும் என, முன்னர்க் கூறியது சம்பவியாது! ஏன் எனின் துயிலின்கண்ணே பிரக்ஞை வடிவப் புத்தி இல்லையாயினும் பிராணனது இருப்பைக் கண்டோம் எனில்! துயில் அவஸ்தையின்கண் பிரஞ்ஞை வடிவ புத்தி முற்றும் இல்லாமற்போனதன்று மற்ருே காரண சொரூபமாய் புத்தி சுழுத்தியின்கண்ணே இருக்கிறது! ஆகையினுல், எங்கே பிரஞ்ஞை இன்ருமோ அங்கே பிராணனும் இன்ரும் என்பது துணியப்பட்டது! எங்கே பிராணன் இன்ருமோ அங்கே பிரஞ்ஞையும் இன்ரும் என்பது அவசியம் உண்டாம்! குடங்களிடத்தில் பிரா ணன் இன்று ஆகலின் அவற்றில் பிரஞ்ஞையும் இன்ரும்! ஆகையினுல் பிராணனும் பிரஞ்ஞையும் ஒன்ரும்! ஒன்று மற்ருென்றைவிடுத்து இருக்கமாட் டாது என்பது துணியப்பட்டது! அந்தப் பிராணப் பிரக்ஞைகள் இரண்டும் ஆன்ம ஞானத்திற்கு ஏதுக் களாம்! ஏன் எனின் ஸ்தம்பாதிகள் சடமாதலின் தமது தோற்றத்தில் தீப முதலிய பிரகாசங்களை அபேட்சை செய்கின்றது! அதுபோலப் பிராணனும் பிரக்ஞையும் சடமாதலின் தமது தோற்றத்திற்கு வேறு யாதாவ தொரு பிரகாசத்தை அபேக்ஷிக்கின்றன. அது பிராணப் பிரஞ்ஞைகளைப் பிரகாசம் செய்வதாயுள்ளது. கூடஸ்த வடிவ ஆன்மாவாம்!

இவ்வகையாய யுத்தியால் பிராணப்பிரஞ்ஞைகட்கு, ஆன்ம ஞானத்தின் காரணத்தன்மையுள்ளது! ஈண்டு இது அபிப்பிராயமாம் — பிராண சப்தமும் பிரஞ்ஞா சப்தமும்! சக்தி விருத்தியினுல் ஆன்மாவின் ஞானம் இன்ரும்! என் எனின்! சக்தி விருத்தியினுலே சக்தியாதி பதங்களும் ஆன்மாவைப் போதிக்கமாட்டாது! மற்ருே இலக்ஷணுவிருத்தியினுல்! பிராண சப்தமும் பிரஞ்ஞா சப்தமும் ஆன்மாவின் போதகங்களாம்! அவ்விலக்கணே சக்கிய அர்த்தத்தில் பொருந்தாமையினுல் இலக்கணு விருத்திக்கன்றி உண்டாகாது! கங்கையின் கண்ணே கிராமம் உள்ளது என்னும் தொடர் மொழியில்! கங்கா சப்தத்தின் சக்கிய அர்த்தம் ஜலத்தின் பிரவாகமாம். அந்தப் பிரவாகத்தின் கண்ணே கிராமத்தின் இருப்புத்தன்மை பொருந் தாததாம். ஆகையினுல் கங்கா பதத்திற்கு கரையின் கண்ணே இலக்ஷணேயாம். அங்ஙனம் ஈண்டுப் பிரசங் கத்தின்கண்ணும் பிராணன் யான் பிரஞ்ஞை யான் என்னும் இவ்வசனம் ஆண்டுச் சரீரத்தின் உள்ளே சஞ்சரியா நின்ற வாயு பிராண சப்ததின் சக்கியார்த்த மாம்! அந்தக்கரணத்தின் விருத்தி விசேஷபுத்தி பிரஞ்ஞை சப்தத்தின் சக்கியார்த்தமாம்! அவ்விரண்டு சக்கியார்த்தத்தின்கண்ணே! ஆன்மத்தன்மை சம்பவி யாது! ஆகையினுல் பிராண சப்தத்திற்கும் பிரஞ்ஞை சப்தத்திற்கும்! பிராணப் பிரஞ்ஞைகளின் பிரவர்த்தக மாய சேதன ஆன்மாவின் கண்ணே இலக்கணே சம்ப விக்கும்! இவ்விலக்கணத்தை நிருபணம் செய்யும் பொருட்டு, முதலில் பிராணப் பிரஞ்ஞை சப்தங்களின் சக்கிய அர்த்தத்தையும்! சக்கிய அர்த்தத்தில் பொருந் தாமையையும் காண்பிப்பாம்.

ஆண்டுப் பிராணன் என்னும் சப்தத்தின்கண் இரு பதங்கள் உள்ளன! ஒன்று ''பிர'' என்னும் பதமாம்! மற்ெறான்றோ! ''அன'' என்னும் பதமாம். அவற்றுள் பிர என்னும் பதத்திற்கு அதிசயம் என்பது பொருளாம்! அன என்னும் பதத்திற்கு சலனரூபக்கிரியை பொருளாம்! அங்ஙனமே பிரஞ்ஞை என்னும் சப்தத்தின் கண்ணும் இருபதங்கள் உள்ளது! ஒன்றோ ''பிர'' என்னும் பதமாம். மற்றொன்றோ ''ஞை'' என்னும் பதமாம். அவற்றுள் ''பிர'' என்னும் பதத்திற்கு அதிசயம் என்பது பொருளாம்! ''ஞை'' என்னும் பதத்திற்கு ஞானம் என்பது பொருளாம்! அவ்விரண்டு பதங்கட்கும் ஒருங்கே பொருளிது துணியப்படும். அதிசயமாய் யாது சலியா நிற்குமோ அது பிராணன் எனப்படும்.

அதிசயமாய் யாது அறிகின்றதோ அது மதி எனப்படும். சரீரத்துள் இருக்கின்ற வாயு அதிசயமாய்ச் சலிக்குமாதலின் அது பிராணனெனப்படும். அந்தக்கரணத்தின் விருத்தி, விசேஷ புத்தி கடபடாதி பதார்த்தங்களை அதிசயமாயறியும்! ஆதலின் பிரஞ்ஞை எனப்படும். வாஸ்தவமாய் விசாரம் செய்யின் பிராணனிடத்தே சலித்தல் பொருந்தாது; ஏனெனின், பிராணன் ஜடமாம். ஜடத்தினிடத்தே சுதந்திரமாய்க் கிரியை சம்பவியாது. இரதகதி ஜடபதார்த்தத்தில் சேதன. அசுவாதிகளின்றி எக்காலத்தினும், எத்தேசத்தினும் சுதந்திரமாய் போதல், வருதலாகிய கிரியைகள் உண்டாகமாட்டாது. அங்ஙனமே ஜடப்பிராணனிடத்தும் சேதனமின்றி, சுதந்திரமாய் போதல் வருதலாகிய கிரியைகள் சம்பவியாது. இவ்வண்ணம் புத்தியின் கண்ணும் கடபடாதி பதார்த்தங்களை அறியும் ஆற்றல் சம்பவியாது. ஏனெனின், பிராணனைப் போன்றே, புத்தியும் ஜடமாம். ஜடவஸ்த்து, தன்னையும், அன்னிய எப்பொருளையும் அறிய மாட்டாது. கருத்திதுவாம் :—

முதலில் மூலதனம் ஒருவனிடத்தில் இருந்தால் அல்லவோ, அந்த தனத்தின் விருத்தியினும் சம்பாதனேயுண்டாம். மூலதனமின்றித் தனத்தின் விருத்தி சம்பவியாதன்ரே? அங்ஙனம், சாமானியமாய்ப் பிராணனிடத்தே சலன ரூபக்கிரியை உண்டாமாயின், புத்தியினிடத்தே ஞானமிருக்குமாயின், அந்தக் கிரியையின் கண்ணும், ஞானத்தின் கண்ணும், அதிசயரூப விசேஷத் தன்மை வடிவ விசேஷத்தன்மை சம்பவிக்கும். அங்ஙனமந்தச் சடப்பிராணனிடத்தே சலன ரூபக்கிரியை சம்பவியாது; புத்தியின்கண், ஞானம் சம்பவியாது. ஆகையினல், எந்தச் சேதன ஆண்மாவின், சமீபத் தன்மையால் சரீர இந்திரியாதிகளினிடத்தோ, அந்தர வாயுவினிடத்தோ சலனரூபக் கிரியையுண்டாம். அந்தச் சேதன ஆன்மாவே பிராண சப்தத்தின் இலக்ஷியார்த்தமாம். இங்ஙனம், பிரஞ்ஞை சப்தத்தின் இலச்சிய அர்த்தமும் சேதனமாய ஆன்மாவேயாம். ஏனெனின், சேதன ஆன்மாவே, சம்பூர்ண ஜடபதார்த்தங்களேயும் பிரகாசிப்பிக்கும் சுயப்பிரகாசத்தன்மையாலே பேதமற்றதனது சொரூபத்தையும் பிரகாசிப்பித்துக்கொள்ளும். அன்னிய எப்பொருளும் ஆன்மாவைப் பிரகாசிப்பியாது. இத்தகைய சுயப்பிரகாச ஆனந்த வடிவ ஆன்மாவே பிராணப் பிரஞ்ஞை சப்தங்கட்குப் பொருளாம்.

ஆன்மாவிற்கு பின்னமாய எவ்வஸ்துவும் பிராணப் பிரஞ்ஞை சப்தங்கட்கு அர்த்தமன்ரும். இந்தப் பிரகாரம் நாநாப்பிரகாரமாய கிரியையின் காரணம் ஆன்மாவேயாகும். ஆகையினல் ஆன்மாவே பிராண சொரூபம். பேதமற்ற ஆன்மாவே பிரஞ்ஞை வடிவன். சம்பூர்ணப் பிராணிகட்கு சீவன காரணமாயிருத்தலின்

ஆன்மாவே. ஆயுஸ்வடிவன், சுயம் பிறப்பு இறப்புக்கள் இல்லாததாகலின் ஆன்மாவே, அமிருத வடிவன் பிராணன், பிரஞ்ஞை, ஆயுஸ், அமிருதம் ஆகிய இவை யாவும் ஆன்ம சொருபமே. இது குடமென்னும் அனந்த ஞானங்கள் ஒரு கடபதார்த்தத்தை விஷயம் செய்வது போலவாம். புருஷனைக் காட்டினும் தண்டம் பின்னமாவதுபோல, ஆயுஸ், அமிருதமென்னும் இரண்டு விசேஷணங்களும் பிராணனினும் பின்னமாக மாட்டா. மற்றோ ஆயுஸ், அமிருதம் என்னும் இரண்டு விசேஷணங்களும் பிராணனிலும் அபின்னமாகவே யுள்ளது. ஆகாசத்தை நபமென்பர், நபத்தை ஆகாச மென்பர். ஆகாச பதத்திற்கும், நப பதத்திற்கும் அர்த்த பேதமின்றாம். அதுபோல, ஆயுஸ் அமிருத பதத்தின் அருத்தத்திற்கும் பிராண பதத்தின் அருத்தத்திற்கும் பேதமின்றாம். மற்றோ ஆயுஸ், அமிருதம் பிராணனது வடிவமேயாகும்.

ஆயுஸ், அமிருதம், பிராணன், என்னும் மூன்று பதங்கட்கும் ஒரே அர்த்தம். அங்கீகரிக்கின், கூறியது கூறல் என்னும் அடைவுண்டாம். ஓரர்த்தத்தைப் போதிப்பதாய அனேக பதங்களினுச்சாரணத்தை கூறியது கூறலென்பர். யாண்டுக் கூறியது கூறல் என்னும் தோஷமாமோ. ஆண்டு ஒரு பதத்திற்கே பயன்படுந் தன்மையுண்டாம். மற்றப் பதங்கள் பயனற்றதாம். எனின், சத்தியம், ஞானம், ஆனந்தம் என்னும் மூன்று பதங்கள் ஆன்மா ஒன்றனையே. உணர்த்துவதாகின்றது. ஆனால் மூன்று சப்தங்களின் பிரவர்த்தியின் நிமித்தம் வேறு வேறாம். ஆகையினால் கூறியது கூறல் என்னும் குற்றமின்றாம்.

இப்போது இப்பொருளையே வெளிப்படையாய்க் காண்பிப்பாம். உலகர்கட்கு ஜீவன காரணம் யாதாமோ

அஃது, ஆயுஸ் எனப்படும். அத்தகைய ஜீவன காரணம் பிராணனும். ஏனெனின் சரீரத்தின் கண்ணே எதுவரை பிராணனிருக்குமோ அதுவரை அதன்கண் ஜீவன வியவகாரமாம். பிராணன் இன்றி, ஜீவன வியவகாரம் உண்டாகாது. இந்நிமித்தங் கொண்டே பிராணனை ஆயுஷென்று கூறுகின்றனர். சரீரத்தை விட்டபின், சுவர்க்கரூப அமிருதத்தையும் சரீரமிருக்குங்காலோ மோக்ஷரூப அமிருதத்தையும் பிராணனுலேயே ஜீவனடைவன். இந்நிமித்தங் கொண்டே பிராணன் அமிருதம் எனப்படும்! அவ் வாயுஷ்! அமிருத சொரூபப் பிராணன் ஆன்மாவாம்! அல்லது பிராண வடிவம் என்பது ஆன்மாவாம்! அது போலப் பிரஞ்ஞை வடிவமும் ஆன்மாவேயாம்! ஏன் எனின்! ஞானசத்தி வடிவப் பிரஞ்ஞையினுலேயே ஆகாசாதி வியாவகாரிகப் பிரபஞ்சத்தையும்! கனவு முதலிய பிராதிபாசிகப் பிரபஞ்சத்தையும் பதார்த்தங் களையும் ஆன்மாவே அறிகின்றது. யாவர் பிராண வடிவஆன்மாவை ஆயுஷ் வடிவமாய் உபாசனை செய்வானே அவன் 100 வருடம் ஜீவிப்பன். யாவர் பிராண வடிவ ஆன்மாவை அமிருத ரூபமாய் உபாசனை செய்வரோ அவர்கள் அக்ஷயமாய சுவர்க்கத்தை அடை வர்கள்! யாவர் பிராண வடிவ ஆன்மாவை ஆயுஷ் அமி ருதம் என்னும் இருவடிவமாயும் உபாசனை செய்வார் களோ அவர்கள் 100 வருட பரியந்தம் ஜீவிப்பதுடன் அக்ஷய சுவர்க்கத்தையும் அடைவார்கள்! பிராண வடிவ உபாதியோடு கூடிய ஆன்மாவை உபாசிப்ப தற்கே இத்தகைய பலம் உண்டாமாயின் பிராண வடிவ உபாதியற்ற சுத்த ஆன்மாவின் ஞானத்தால் புருஷ னுக்கு மகாபலத்தின் அடைவுண்டாமென்பதில் யாது ஆச்சரியம்!

இவற்றுள் எப்பொருளின் கண்ணே ஆன்ம புத்தி செய்வது எனின் சில பெரியோர் கூறிய வசனத்தைக் காண்பிப்பாம்! இப்போது அப்பெரியோராற் கூறிய வசனமாவது; அதாவது உள்வாயுவோடு கூடிய சம்பூரண இந்திரியங்களின் வாசகம் பிராண சப்தங் களாம்! கேவலம் உள்வாயுவின் வாசகம் பிராண சப்தம் அன்ரும். ஏன் எனின் அதிசயமாய்த் தனது வியா பாரத்தை யாது செய்யுமோ அது பிராணன் எனப் படும். இந்தப் பிராண சப்தத்தின் அர்த்தம், சம்பூரண இந்திரியங்களிடத்தும் பொருந்தும். ஆகையினுல் சம்பூரண இந்திரியங்கட்கும், பிராண சப்தத்தின் அர்த்தம் சித்திக்கும்! அவ்வெல்லாப் பிராணன்களுக் கும் ஒன்றற்கே பிரதானமாம் தன்மை நியமமாய்ச் சித்தியாது. மற்ரே! தத்தம் வியாபாரத்தில் யாவற்றிற் கும் பிரதானத் தன்மை உண்டு! ஏன் எனின் வாக்கிந் திரியத்திற்கு சப்த உச்சாரணம் காரியமாம். கண் இந்திரியத்திற்கு ரூபாதிகளின் தரிசனம் காரியமாம்! இவ்வண்ணம் அன்னிய இந்திரியங்கட்கும் தத்தம் காரியம் வேறு வேரும். அக்காரிய பேதத்தால் இந்திரி யம் வேறு வேறேயாயினும் தத்தம் காரியத்தின் கண்ணே எல்லா இந்திரியங்களும் ஒரு தன்மையை யடையும்! கிராமத்தின் கண்ணே வேறு வேரு இருக் கின்ற மகாஜன புருடர் விவாகாதி காரியத்தின் பொருட்டு யாவரும் ஒருமைப்படுவது போல் எப்போது ஓர் இந்திரியம் தனது வியாபாரத்தில் பிரவிர்த்தியடை யுமோ அப்போது அன்னிய இந்திரியங்கட்குத் தமது வியாபாரத்தின் கண்ணே பிரவிர்த்தி உண்டாக மாட் டாவாம். இதுவே இந்திரியங்கட்கு ஏகத்தன்மையாம். ஏன் எனின், எக்காலத்தில் வாக்கிந்திரியம் சப்த உச் சாரணமாய தனது வியாபாரத்தைச் செய்யா நிற்

குமோ அக்காலத்தில் நேத்திராதி இந்திரியங்கள் தத்தம் வியாபாரங்களைச் செய்யமாட்டாது! எக்காலத்தில் நேத்திரேந்திரியம் ரூபாதிகளின் தரிசன வடிவ வியாபாரத்தை உற்பன்னம் செய்யுமோ அக்காலத்தில் வாக்காதி இந்திரியங்களின் வியாபாரம் உற்பன்னம் செய்யமாட்டாது! இங்ஙனம் சர்வ இந்திரியங்களிடத்தும் அறிந்து கொள்ளல் வேண்டும். ஒரு கணவனுக்குத் தனது விவாகத்தின்கண்ணே பிரதானத் தன்மையும் மற்றொருவனுடைய விவாகத்தின்கண்ணே கௌணத்தன்மையுமாம்; ஆதலின் நியமமாய் கணவனிடத்தே பிரதானத்தன்மையேனும் கௌணத் தன்மையேனுமின்றும். அங்ஙனமே வசனாதி வியாபாரத்தின்கண்ணே வாக்கியந்திரியத்திற்கு பிரதானத் தன்மையாம். நேத்திராதி இந்திரியங்கட்குக் கௌணத்தன்மையாம். ரூபதரிசனத்தின்கண், கண் இந்திரியத்திற்கு பிரதானத்தன்மையாம். வாக்காதி இந்திரியங்கட்குக் கௌணத்தன்மையாம்.

இங்ஙனம் சர்வ இந்திரியங்களில் தத்தம் வியாபாரத்தின் கண்ணே. பிரதானத் தன்மையும் அன்னிய இந்திரிய வியாபாரத்தின் கண்ணே கௌணத் தன்மையும் அறிந்து கொள்ளல்வேண்டும். நியமமாய் பிரதானத் தன்மை எவ்விந்திரியத்தின் கண்ணுமின்றும்; ஆகையினுல் யாவும் சமானமாம். சுருதியின் கண்ணும் வாக்காதிய சம்பூர்ணப் பிராணன்களுக்குச் சமானத் தன்மையும் அநேகத் தன்மையும் கூறப்பட்டிருக்கின்றன. அல்லது யுக்தியினுல் விசாரித்துப் பார்க்கினும். வாக்காதி சம்பூர்ணப் பிராணன்களுக்குச் சமானத் தன்மையே சித்திக்கும். விஷயத் தன்மை சித்தியாது. ஏனெனின் இப்புருஷன் எக்காலத்தில் வாக்கிந்திரியத்தால் சப்தோச்சாரணம் செய்வனே அக்காலத்தில் நேத்திரேந்

திரியத்தாற் பாரான். எக்காலத்தில் நேத்திரத்தாற் காண்கின்றனனே அக்காலத்தில் வாக்கிந்திரியத்தால் வசனியான். இங்ஙனம் சம்பூர்ண இந்திரியங்கட்கும் தத்தம் வியாபாரத்தின்கண் பிரதானத் தன்மையாம். அன்னிய இந்திரிய வியாபாரத்தின்கண் கௌணத் தன்மையாம். நியமமாய் வாக்காதி இந்திரியங்கட்குப் பிரதானத் தன்மையே யுண்டாயின், தரிசனரூப வியா பாரத்தின்கண் கண் இந்திரியத்திற்கே போல வாக்கிந் திரியத்திற்கும் பிரதானத் தன்மை யுண்டாதல் வேண்டும்.

தரிசனரூப வியாபாரத்தின்கண் வாக்கிந்திரியத் திற்கு பிரதானத் தன்மையில்லை. அல்லது நியமமாய் இந்திரியங்களிடத்தே கௌணத் தன்மையே யுடன் படின் சப்த உச்சாரண ரூப வியாபாரத்தின்கண்ணும் வாக்கிந்திரியத்திற்குப் பிரதானத் தன்மை யுண்டாக மாட்டாது; மற்றோ கௌணத் தன்மை யுண்டாக வேண்டும். கௌணத் தன்மையோ உண்டாகமாட் டாது. இங்ஙனம் சர்வ இந்திரியங்களிடத்தேயும் பிரதானத் தன்மை கௌணத் தன்மைகட்கு நியமமின் றும். அல்லது வாக்காதி சம்பூரணப் பிராணன்களி டத்தே ஏக காலத்தில் கிரியை உண்டாகமாட்டாது. மற்றோ ஏக இந்திரியத்தின் வியாபாரம் சாந்தியை யடையுங்கால் இந்திரியம் தனது வியாபாரத்தைச் செய்யும்.

எல்லா இந்திரியங்களும் ஏககாலத்தில் வியாபா ரத்தை உற்பன்னம் செய்யாவிடின் இவ்வுலகரின் அனு பவம் விருத்தமாம்! வாக்கிந்திரியத்தால் வசனிக்கின்ற யானே! நேத்திர இந்திரியத்தால் ரூபத்தைக் காண் கின்றேன்! செவி இந்திரியத்தால் சப்தத்தை நாம்

கேட்கின்றேன்! மூக்கு இந்திரியத்தால் கந்தத்தைக் கவர்கின்றேன்! தோல் இந்திரியத்தாற் பரிசத்தை அறிகின்றேன்! நாவிந்திரியத்தாற் சுவையை அறிகின்றேன்! கை இந்திரியத்தால் கொடுத்தல் வாங்கல் ஆகிய கிரியை செய்கின்றேன்! பாத இந்திரியத்தால் யான் நடக்கின்றேன். உபஸ்த இந்திரியத்தால் ஆனந்தத்தை யடைகின்றேன்! பாயுரு இந்திரியத்தால் மலாதிகளைப் பரித்தியாகம் செய்கின்றேன்! பிராணனுல் உசுவாசாதி கிரியையைச் செய்கின்றேன்! அகங்காரத்தால் அகம்பாவத்தை யடைகிறேன்! மனத்தால் சங்கற்ப விகற்பங்களைச் செய்கின்றேன்! சித்தத்தால் சாமான்ய ரூபமாய்ப் பதார்த்தங்களை யானறிகின்றேன்! புத்தியால் தேகத்தின்கண்ணே தோன்றும் சுகதுக்காதி பதார்த்தங்களைச் சாமான்யமாயும் விசேஷமாயும் யானறிகின்றேன் என்னும் இவ்வகையாய உலகரின் அநுபவப் பிரமாணத்தால் சம்பூரண இந்திரியங்களிடத்தே ஏக காலத்திலேயே சம்பூரண வியாபாரம் தோற்றுமாம்! ஆகையினுல் நியமமின்றிப் பிரதானத் தன்மையைக் கொண்டு சம்பூரண இந்திரியங்கட்குச் சமானம் கூறல் சம்பவியாது.

எனின், ஏக காலத்தில் சம்பூரண இந்திரியங்களின் வியாபாரத்தின்கண் உலகரின் அநுபவம் யாது கூறப்பட்டதோ! அது மயல் வடிவமாம்! ஏனெனின்! எந்த க்ஷணத்தில் ஓர் இந்திரிய வியாபாரமாமோ அந்த க்ஷணத்தில் மற்ருேர் இந்திரிய வியாபாரம் உண்டாகாது! மற்ருே! மற்ருெரு க்ஷணத்தில் மற்ருேர் இந்திரியத்தின் வியாபாரமுண்டாம்! மூன்ருவது க்ஷணத்தே மூன்ருவது இந்திரிய வியாபாரமுண்டாம்! இவ்வாறு க்ஷணத்தின்பின் க்ஷணத்தின்பின் இந்திரியங்களின்

வியாபாரமாம்! ஆனுல் அந்த க்ஷணம் அதிசூக்குமமாம். ஆதலின் அவிவேகி புருஷர்களுக்கு ஏக காலத்தில் எனக்குச் சம்பூரண தரிசனுதி வியாபாரம் உற்பன்னமாயது என மயக்க உணர்ச்சியால் உண்டாம். மேலுங் கீழுமா இருக்கின்ற அநேகம் தாமரை இலைகளை ஏக காலத்தில் ஊசியால் குத்தப்படுவதின்ருைம். முதற் க்ஷணத்தே ஊசியின்கண்ணே கிரியையுண்டாம். இரண்டாவது க்ஷணத்தே முன் இடத்தினின்றும் ஊசியின் விபாக முண்டாம்! மூன்ருவது க்ஷணத்தே ஊசியின் முற்சை யோக நாசமுண்டாம்! நான்காவது க்ஷணத்தே தாமரை இலை ரூப உத்தர தேசத்தோடு ஊசியின் சையோகம் உண்டாம்! இங்ஙனம் ஒவ்வொரு தாமரை இலையும் குத்துப்படுவதில் நந்நான்கு க்ஷணங்களாம். ஆனுல் அக்ஷணம் அதிசூக்குமமாம். ஆகையினுல் அவிவேகி புருஷர்களுக்கு ஏக காலத்தின் கண்ணே யான் அநந்தம் தாமரை இலைகளை ஊசியால் குத்தினேன் என மயக்க வுணர்ச்சி உண்டாகின்றது. இவ்வண்ணம் வாக்காதிப் பிராணன்களின் வியாபாரமும் வேறு வேறு காலத்திலுண்டாம். ஆனுல், அக்காலம் அதிசூக்குமமாம்.

ஆகையினுல் ஏக காலத் தன்மையின் மயல் அவிவேகி புருஷர்களுக்குண்டாம். ஆகையினுல் சம்பூரணப் பிராணன்களும் சமானமாம்.

இங்ஙனம் சம்பூரணப் பிராணன்களிடத்தே சமானத் தன்மையைக் கூறியுள்ளார்கள். இது கேட்பவருக்கு மேலே வாயு வடிவப் பிராணனிடத்தேயே ஆன்ம புத்தியின் விரிவைக் கூறி உள்ளதே எனின் இவ்வுலக ஜீவன காரணத் தன்மை பிராணன் இடத்தே இருக்கின்றது. பரலோக ஜீவனகாரணத் தன்மையும்

பிராணன் இடத்தே உள்ளது. அன்னிய எவ்வாக் காதி இந்திரியங்களிடத்தும் இன்ரும். அந்தச் ஜீவனத் தின் காரணத்தன்மையே. பிராணன் இடத்தே ஆன்ம புத்தியின் ஏதுவாம்! அந்தச் ஜீவன காரணத் தன்மையே வாக்காதி இந்திரியங்களினின்றும் பிரா ணன் இடத்தே விசேஷத் தன்மையாம். வேறு யாதொரு விசேஷத் தன்மையும் இன்ரும்.

மேலே அப்பெரியோர் கூறியுள்ள நியமம் இன்மை யும் வாயு வடிவ முக்கியப் பிராணன் இடத்தே சம்பவி யாது! மற்ருே வாக்காதி இந்திரியங்களின் கௌண வடிவ பிராணன் இடத்தேயே அந்த நியமம் இன்மை சம்பவிக்கும்! ஏன் எனின், எதுவரை பிராணன்களின் வியாபாரம் சரீரத்தின்கண்ணே நிகழ்ந்து கொண்டே இருக்குமோ அதுவரை சம்பூரண வாக்காதி இந்திரி யங்களிடத்தே வாசனுதிக் கிரியை நிகழும் பிராணனது வியாபாரம் இன்றேல் எவ்விந்திரியத்தின் கண்ணும் எக்கிரியையும் உண்டாகாது! இவ்வார்த்தை சர்வ உலகரின் அநுபவ சித்தமாம்! பிராணன் இருப்பின் வாக்கு, கை, பாதம், பாயுரு, உபஸ்தம், தோல், கண், செவி, மூக்கு, நாவென்னும் இப் பத்து இந்திரியங் களிடத்தே ஒவ்வோர் இந்திரிய வியாபாரம் இன்றியும் அல்லது சம்பூரண இந்திரியங்களின் வியாபாரமின்றி யும், பிராணிகளின் ஜீவனத்தைக் கண்டோம். வாக்கிந் திரியத்தின் வசன ரூப வியாபாரம் இன்றியும் ஊமைப் பிராணிகள் ஜீவிக்கின்றன.

கை இந்திரியத்தின் கொடுப்பது வாங்குவதாகிய கிரியை இன்றியும் புருடன் ஜீவிக்கின்றனன். பாயுரு இந்திரியத்தின் மலவிசர்க்கரூப வியாபாரம் இன்றியும் சில ரோகிப் பிராணிகள் ஜீவிக்கின்றன! உபஸ்த

இந்திரியத்தின் ஆனந்த வடிவ வியாபாரமின்றியும் பிரஹ்மசாரி புருஷன் ஜீவிக்கின்றனன். தோல் இந்திரிய வியாபாரம் இன்றிச் சில குஷ்டிப் பிராணிகள் ஜீவிக்கின்றன. கண் இந்திரியத்தின் தரிசன வடிவ வியாபாரமின்றியும், அந்தகப் பிராணிகள் ஜீவிக்கின்றன. செவி இந்திரியத்தின் கேட்டல் வடிவ வியாபாரமின்றியும் செவிடரும் ஜீவிக்கின்றனர். நாவிந்திரியத்தின் சுவை கிரகணஞ் செய்யும் வியாபாரமின்றியும் நாவிற் தோஷத்தோடு கூடிய புருஷன் ஜீவிக்கின்றனன். மூக்கிந்திரியத்தின் மூக்கிற்தோஷவானாகிய புருஷனும் ஜீவிக்கின்றனன். அந்தகரணத்தின் நிச்சய வடிவ வியாபாரமின்றியும் ஜட உன்மத்த புருஷன் ஜீவிக்கின்றனன். இவ்வண்ணம் சம்பூரண இந்திரியங்களின் வியாபாரம் இன்றியும் பிராணிகள் ஜீவிக்கின்றன. ஆனால் பிராணனுடைய வியாபாரமின்றி எப்பிராணிகளும் ஜீவித்திருப்பதை யாம் யாவருங் கண்டிலோம்! ஆகையினால் சம்பூரண இந்திரியங்களினும் பிராணனே மேன்மையுடையதாம் என்பதை அங்கீகரித்தே வேதம் பிராணனை "உத்தம்" ரூபமாய் உபாசிக்குமாறு கூறியது. கோளகங்களாலும், இந்திரியங்களாலும், தேவதைகளாலும் கூடி இருப்பினும் இச்சரீரம் மூர்ச்சையாதியவஸ்தையின்கண் மரணமடைந்ததற்குச் சமானமாம்! அச்சரீரத்தை ஆசனாதிகளினின்றும் இப்பிராணன் எழுப்பும்! இக்காரணத்தால்தான் பிராணனை "உக்தம்" என்னும் நாமத்தால் விவேகி புருஷன் உபாசனை செய்வன். அல்லது சம்பூரண வாக்காதிகளினின்றும் முன்னர்க் காரண ரூபமாயுள்ள பிராணனே கிளம்புவன்! இக்காரணத்தினாலும் பிராணன் "உக்தம்" எனப்படும். யாது யாவற்றினும் முன்னர்க் கிளம்புதலையடையுமோ

அது மேலானதாம். இரண்ய கர்ப்பன் யாவற்றினும் முன்னர்க் கிளம்புதலையுடைவன்! ஆகையினுல் மேலானவன். அங்ஙனமே, பிராணனும் யாவற்றிற்கும் முன்னர்க் கிளம்புதலையுடையும். ஆகையினுல் மேலானதாம். யாது மேலானதாமோ அது இத தமமாகும். ஆகையினுல் பிராண சொரூப ஆன்மாவாய இதுவே இததமமாம். என்னின் வேருய யாதும் இததமம் அன்ரும்.

இப்போது பிராண பிரஞ்ஞை வடிவத் தன்மையைக் காண்பிப்பாம். எங்ஙனம் நேத்திராதி ஞான இந்திரியங்கட்கும், வாக்காதி கர்ம இந்திரியங்கட்கும் முக்கிய பிரஞ்ஞை வடிவத் தன்மையின்ருமோ! அந்தக் கரணத்தினது சம்பந்தத்தால் நேத்திராதி இந்திரியங்கட்குக் கௌணப் பிரஞ்ஞை வடிவத் தன்மையாமோ அங்ஙனம் பிராணனுக்குக் கௌணப் பிரஞ்ஞை வடிவத் தன்மை இன்ரும். மற்ருே பிராணனுக்கு முக்கியப் பிரஞ்ஞை வடிவத் தன்மையேயாம்.

கருத்திதுவாம் — ஆயுஷ், அமிருதம், பிராணன் என்பவற்றிற்குப் பரஸ்பரம் பேதமின்ரும். மற்ருே பிராணனே ஆயுஷ், அமிருத சொரூபமாம். இதனை முன்னரே கூறியுள்ளோம். அங்ஙனமே பிராணனுக்கும் பிரஞ்ஞைக்கும் பரஸ்பரம் பேதமின்ரும் மற்ருே. பிராணனே பிரஞ்ஞை வடிவமாம். அல்லது உலகப் பிரசித்த வாயுரூபப் பிராணனும், அந்தக் கரணத்தின் விருத்திரூபப் பிரஞ்ஞையும், கட்டிலின் கால்கள் வேறு வேரு இருப்பது போல வேறு வேருய்த் தோற்ற மாட்டாது. மற்ருே ஜீவன காலத்தின்கண் சர்வ ஜீவர்களின் சரீரத்தின் கண்ணும் ஒன்ருகவே பிராணப் பிரஞ்ஞைகள் தோற்றுவனவாம். மரண காலத்தின்

கண்ணும் ஒன்ருகவே பிராணப்பிரஞ்ஞைகள் லோகாந் திரத்தின்கண்ணும் செல்லும். ஆகையினுல் பிராண னும் பிரஞ்ஞையும் அபேதமாம். உலகப்பிரசித்தமாய பிராணன் இடத்தும் பிரஞ்ஞை இடத்தும்கூடப் பேதம் இல்லாதபோது பிராணப் பிரஞ்ஞைச் சப்தங்கட்கு இலக்ஷிய அர்த்தமாகிய அலௌகீக அத்விதீய ஆன்மா வின்கண்ணே எக்காரணத்தால் பேதம் சித்தியாம்; மற்ருே எவ்வாற்ருனும் பேதம் சித்தியாது. ஆகை யினுல் பிராணப் பிரஞ்ஞா சொரூபமே ஆன்மாவாம். அல்லது அன்வய வியதிரேகத்தாலும் பிராணனுக்கே ஆன்மத்தன்மை சித்தமாம். ஏனெனின், சுழுப்திய வஸ்த்தையின் கண்ணும், மரணுவஸ்த்தையின் கண் ணும் பிராணன் உளது. ஆகையினுல் பிராணனுக்குச் சுழுப்தி மரணத்தின்கண் அன்வயமாம். வாக்காதி இந்திரியங்கட்கு சுழுப்தி அவஸ்த்தையின் கண்ணும், மரணவஸ்த்தையின் கண்ணும் இலயம் உண்டாம். ஆகையினுல் அவ்வாக்காதிகட்கு ஆண்டு விபதிரேக மாம். இந்தப் பிரகாரமாய அன்வய வியதிரேகமே பிராணனுக்கு ஆன்மரூபத் தன்மையைச் சித்தஞ் செய்யும்.

இப்போது இப்பொருளேயே வெளிப்படையாய் காண்பிப்பாம். எச்சுழுப்தியவஸ்தையின் கண்ணே தூல சூக்கும சரீரங்களின் அபிமானியாய, இஜ்ஜீவான்மா சயனத்தை யடைந்ததாய்ச் சிறிது மாத்திரமேனும், சுவப்பன பதார்த்தங்களேக் காண்பதின்ருே; அச்சுழுப்தி யின் கண்ணே இஜ்ஜீவான்மா பிராண உபகித பரமான் மாவோடு அபேத பாவத்தையடையும். அவை நனுக் கனுவவஸ்தையின் கண்ணும் அபேதமாயே யிருப்பினும் உபாதியால் பேதமும் வாஸ்த்தவத்தில் அபேதமும்

என அவற்றிற்கு இரண்டுமுள. ஈண்டு சுழுப்தியவஸ்த் தையின் கண்ணே கேவலம் அபேதமேயாம். கருத்திது வாம் :–வாக்காதி ஐந்து கர்ம இந்திரியங்கள் நேத்தி ராதி ஐந்து ஞாநேந்திரியங்கள் அந்தக்கரணம் நான்கு. வாக்காதிகளின் விஷயம் என்னுமிவ்வெல்லா உபாதிகளும் நனவவஸ்தையின் கண்ணும், கனவவஸ் தையின் கண்ணும் ஆன்மாவைப்பேதம் செய்வனவாம். அவ்வுபாதிகளாலும் சுழுப்தியவஸ்தையின் கண்ணே ஆன்மாவின் பேதம் சித்தியாது; ஏனெனின் இவ் வெல்லா வாக்காதி இந்திரியங்களும் தத்தம் விஷயங் களோடு சுழுப்தியவஸ்தையின்கண் பிராணவுபகித பரமான்மாவின்கண்ணே லயத்தையடையும். ஆகை யினால் சுழுப்திவஸ்த்தையின்கண் பரமான்மாவிற்கு ஒருமையே சம்பவிக்கும். யத்விதீய ஆன்மாவின் கண்ணே பேதம் சம்பவியாது. மற்றோ வாக்காதிய உபாதிகளால் ஆன்மாவின் கண்ணே பேதம் சம்பவிக் கும். அவ்வாக்கு முதலியவுபாதிகள் சுழுப்தியவஸ்த் தையின்கண்ணே இலயமடையும். ஆகையினால் சர்வ பேதங்களுமற்ற பிராண சொரூப ஆன்மாவின் கண்ணே ஏகத்தன்மையே சுழுப்தியவஸ்தையின் கண்ணே சித்தமாம்.

சுழுப்தியவஸ்த்தையின்கண் வாக்காதி சம்பூர்ண இந்திரியங்களின் இலயம் பிராணனிடத்தேயாமெனக் கூறியுள்ளோம். அதனாலிது நிச்சயமாம். வாக்காதி இந்திரியங்களின் உபாதான காரணம் பிராணனும். ஏனெனின் காரிய இலயத்தின் ஆதாரம் உபாதான காரணமேயாம். நிமித்த காரணமன்றாம். கடத்தின் இலய ஆதாரம், மண்ணும். குலாலன் அன்றாம். ஆத லின் குலாலனைப்போல வாக்காதி இந்திரியங்கட்குப்

பிராணனினும் வேருயே ஒரு நிமித்த காரணம் கூற வேண்டுமெனின் வாக்காதி இந்திரியங்களின் உபாதான காரணமும், நிமித்த காரணமும் பிராண வடிவ ஆன்மாவேயாம். ஒரே சிலந்திப் பூச்சியாகிய ஜந்துவானது நூலினுக்கு உபாதான நிமித்த காரணமாவது போல.

நையாயிகர் தம் மதத்தில் கட ஈஸ்வர சம்யோகத்திற்கு ஒரு ஈஸ்வரனே உபாதான நிமித்த காரணமாவர். சுழுப்தியவஸ்த்தையின்கண் எந்தப் பிராண வடிவ ஆன்மாவின் கண்ணே வாக்காதி இந்திரியங்கள் இலயத்தையடையுமோ அந்தப் பிராணவடிவ ஆன்மாவின் கண்ணே நனவவஸ்த்தையின் கண் சம்பூர்ண வாக்காதி இந்திரியங்கள் உற்பன்னமாகின்றன. மண்ணினின்றும் உற்பன்னமாய கடம் மண்ணினின்றும் பின்னமாவதின்ரும். அங்ஙனமே பிராண வடிவ ஆன்மாவினின்றும் உற்பன்னமாய வாக்காதி இந்திரியங்கள் ஆன்மாவினும் பின்னமாவதின்ரும்! மற்ரே எவ்வகையாலும் அபின்னமேயாம்!

வாக்காதி இந்திரியங்கள் பிராணவடிவ ஆன்மாவினின்றும் பின்னம் அன்ருமாயின் பின்னமா ஏன் தோற்றல் வேண்டும்! எனின் இவ்வாக்காதிகள் பிராணவடிவ பரமான்மாவினது ஐஸ்வரியங்களாம். ஆகையினுல் பரமான்மாவினும் பின்னமாய் உற்பன்னமாகாது! மற்ரே பரமான்மாவின் சொருபமேயாம் அவற்றினின்றே உற்பன்னமாம்! அவிவேகத்திஞலேயே அவற்றின் பேதம் தோற்றுகின்றன. வாக்காதி இந்திரிய ரூப ஐஸ்வரியங்கட்கு பிராணவடிவ ஆன்மாவினின்றும் அபின்னமாய்க் கூறுவது. சம்பவியாது. ஏன் எனின் உலகின் கண்ணே பின்னமாயுள்ளதே

காரிய காரண பாவமாய்த் தோற்றக் கண்டோம்! எனின் பின்னங்கட்கே காரிய காரண பாவம் என்னும் நியமமின்ரும். மற்ரே! அபின்னங்கட்கும், காரிய காரண பாவம் உண்டாம். ஓங்கி எரியா நின்ற அக்கினியினின்றும், பொறி உற்பன்னமாம். அப்பொறி யானது அக்கினியினின்றும் பின்னமன்ரும்! மற்ரே! அபின்னமேயாம்! அங்ஙனமே, நனு அவஸ்தையின் கண் பிராணவடிவ ஆன்மாவினின்றும் வாக்காதி இந்திரியங்கள் உற்பன்னமாம். அவ்வாக்காதி இந்திரி யங்களினின்றும் அக்கினியாதி தேவதைகள் உற்பன்ன மாம். அவ்வக்கினியாதி தேவதைகளினின்றும், சப்த்தோக்ஷாரணுதி வியாபாரம் உண்டாம். மேலும் இவ்வர்த்தத்தையே யுக்திகளால் காண்பிப்பாம். சுழுத்தியவஸ்தையின் கண் சுழுப்த புருஷன் விஷய சகித வாக்காதி இந்திரியங்களைக் காண்கிலன். அங் ஙனமே அன்னிய எந்தனுப் புருஷனும் சுழுப்த புருஷ னுடைய வாக்காதி இந்திரியங்களைக் காண்கிலன்.

சுழுப்த புருஷனுடைய பிராணனையோ அந்நிய நனுப் புருஷன் காண்கின்றனன்! இக்காரணத்தினுலும் பிராணனுக்கே வாக்காதி இந்திரியங்களின் காரணத் தன்மை சம்பவிக்கும். ஏன் எனின் எவ்வஸ்துவி லிருந்து எவ்வஸ்து தோன்றுகின்றதோ, எவ்வஸ்து வில் இருந்து எவ்வஸ்து தோன்றுகிறதில்லையோ ஆண்டு அவ்வஸ்துவிற்கு அவ்வஸ்து காரியமாம்! மண் ணில் இருந்தே கடாதிகள் தோன்றுகின்றன. கடாதி கள் உற்பத்திக்கு முன்னர் மண்ணில் இருந்து கடாதி கள் ஆண்டுத் தோற்றமாட்டாவாம்! ஆகையினுல் மண்ணினுக்குக் கடாதிகள் காரியமாம்.

எஃது எப்போது தோற்றுமோ அது அதனது காரியம் எனக்கூறிய இலக்கணம் அதிவியாப்தி தோஷ

முடையதாம். ஏன் எனின் சூரியாதிப் பிரபைகளி லிருந்தே கடாதிகளின் தோற்றம் கண் இந்திரியத் தால் உண்டாகின்றது! பிரகாசமின்றி இருளின் கண்ணே இருக்கின்ற கடாதிகளின் தோற்றமின்ரும். ஆகையினுல் கடாதிகளும் பிரகாசத்தின் காரியமாக வேண்டும்! பிரகாசத்தின் காரியம் கடாதிகள் ஆவ தின்ரும்! எனின் எவ்வஸ்துவிலிருந்து எவ்வஸ்து உற்பன்னமாமோ அவ்வஸ்துவிற்கு வேருய் எவ்வஸ்த் துவினும் உற்பன்னமாகாதோ அவ்வஸ்துவிலிருந்தும் எவ்வஸ்து ஒருகாலும் ஆண்டு உற்பன்னமாகாதோ அவ்வஸ்து அவ்வஸ்துவின் காரியமாம்! நூலில் இருந்தே ஆடை உற்பன்னமாம்! நூலின் வேருய் மண் இருந்த போதினும் அதினின்றும் ஆடையின் உற்பத்தி உண்டாகாது. ஆடையின் உற்பத்தியின் முன்னர் நூல்கள் இருந்தபோதினும் துரிவேமதி சாமக்கிரி இன்றி ஆண்டு ஆடை உற்பன்னமாகாது! ஆகையினுல் நூல்களுக்கு ஆடை காரியமாம்! மண் ணிற்குக் கடம் காரியமாம்! சூரியாதிப் பிரகாசங்கட்குக் கடம் காரியமன்ரும். ஆகையினுல் இக்காரியத்தின் இலக்கணம் தோஷமற்றதாம்! இக்காரிய இலக்கணம் வாக்காதி இந்திரியங்களிடத்தும் பொருந்தும்! எப்படி எனின், சுழுப்தி அவஸ்தையின் கண்ணே பிராணன் இருந்தும் ஆண்டு வாக்காதி இந்திரியங்கள் உற்பன் னம் ஆக மாட்டாது. நனு அவஸ்தையின் கண் பிரா ணன் இருந்தே வாக்காதி இந்திரியங்கள் உற்பன்ன மாம். பிராணனினும் வேருய எக்காரணத்தினின்றும் வாக்காதி இந்திரியங்கள் உற்பன்னமாவதின்ரும். ஆகையினுல் வாக்காதி இந்திரியங்கள் பிராணனது காரியமாம்.

கருத்திதுவாம்-அக்கினியை விட்டுப் புகை இராது. மற்ருே யாண்டுப் புகையுள்ளது ஆண்டு அவசியம் அக்கினியுள்ளது. அக்கினியோ புகையை விட்டும் தப்தாய பிண்டத்தின் கண்ணே இருக்கும். ஆதலால் அக்கினி வியாபகம்! புகை வியாப்பியமாம்! அங்ஙனமே பிராணனை விட்டு வாக்காதி இந்திரியங்கள் இராது. பிராணனே வாக்காதி இந்திரியங்கள் இலயமடைந்த காலத்தும் இருக்கும். ஆகையினுல் பிராணன் வியாபகமாம்! வாக்காதி இந்திரியங்கள் வியாப்பியம் ஆம்! காரணம் வியாபகமாம்! காரியம் வியாப்பியமாம். அல்லது சுழுப்தியின் கண்ணே விஷயத்தோடு வாக்காதி இந்திரியங்களின் கூட்டம் பிராணனிடத்தே இலயத்தை அடையாதிருப்பின் சுழுப்தியின் கண்ணே சுழுப்த புருஷனுலும் அன்னிய நனவுள்ள புருஷனுலும் விஷய சகித வாக்காதி இந்திரியங்கள் அறியப்படல் வேண்டும். ஆண்டு அங்ஙனம் அறியப்படுவதின்ரும். ஆகையினுல் இஃதறியப்படல் ஆம்—சுழுப்தியின் கண் விஷயசகித வாக்தாதி இந்திரியங்கள் பிராணன் இடத்திலேயே இலயத்தை அடைந்துவிடும் என்பதே அது தண்டத்தால் நாசமாகிய கடாதிகள் மண் வடிவ தனது கரணத்தின் கண்ணேயே இலயத்தை அடையும்.

வாக்காதி இந்திரியங்களுக்கும் சப்தோச் சரணுதி விஷயங்கட்கும் பரஸ்பரம் பேதமாம். ஆகையினுல் சுழுப்தியின் கண்ணே வாக்காதி இந்திரியங்கள் இலயத்தை அடைந்திருப்பினும் அவற்றினது விஷயங்களின் இலயமடைதல் சம்பவியாது எனின்!

காரணத்தின் இன்மை உண்டாயின் காரியமும் இன்ரும் - விளக்கின்றி விளக்கின் காரியமாகிய பிரபை உற்பன்னமாக மாட்டாது. அங்ஙனமே, வாக்காதி இந்

திரியங்கள் இலயத்தை அடையுமாயின் அவற்றின் காரியமாய சப்தோச்சாரணுதி விஷயங்களும் சுழுப்தி யவஸ்தையின்கண் உற்பன்னமாகாவாம்.

ஆகையினுல் அவ்விஷயங்கட்கும் இலயமே சம்பவிக்கும். ஆகையினுல் எவ்வஸ்து எவ்வஸ்துவின் கண்ணே இலயத்தை அடையுமோ அவ்வஸ்து அவ்வஸ்துவினின்றும் உற்பன்னமாம் என்பது நியமம் ஆம். ஓங்கி எரியா நின்ற அக்கினியின்கண் பொறிகளின் இலயமாம். அவ்வக்கினியினின்றும் அப்பொறிகளின் உற்பன்னமாம்! அங்ஙனமே சுழுப்தியவஸ்தையின்கண் வாக்காதி இந்திரியங்கட்குப் பிராணனிடத்தே இலயத்தையடையும்! நனு அவஸ்தையின்கண் அந்தப் பிராணனினின்றும் வாக்காதி இந்திரியங்கள் உற்பத்தி உண்டாம்!

அக்கினியின்கண்ணே எந்த எந்தப் பொறிகள் இலயத்தையடையுமோ அந்த அந்தப் பொறிகள் மீண்டும் உற்பன்னமாவதின்ரும். மற்ரூே அவற்றினும் பின்னமாயே பொறி உற்பன்னமாம். அப்பொறிகள் மீண்டும் உற்பன்னமாவது இன்ரும். மற்ரூே அவற்றினும் பின்னமாயே பொறி உற்பன்னமாம். அங்ஙனம் சுழுப்தியவஸ்தையின்கண்ணே இலயமாகிய வாக்காதி இந்திரியங்களினின்றும் பின்னமாகவே, வாக்காதி இந்திரியங்கட்கு நனவின்கண் உற்பத்தி யுண்டாக வேண்டுமெனின்—அக்கினியினின்றும் உற்பன்னமாகிய பொறி பூர்வம் தோன்றி மறைந்த பொறியினின்றும் வேருகத் தோன்றும். அங்ஙனமே, நனவின்கண் பிராணனினின்றும் உற்பன்னமாகிய வாக்காதி இந்திரியங்களினின்றும் பேதமாய்த் தோற்ற மாட்டாது! மற்ரூே சுழுப்தியவஸ்தையின்கண்ணே

எவ்வாக்காதி இந்திரியங்கள் பிராணனிடத்தே இலயத்தையடைந்தனவோ அவ்வாக்காதி இந்திரியங்களே மீண்டும் நனவின்கண்! பிராணனினின்றும் உற்பன்னமாய்த் தோற்றுமாம். ஆகையினுல் அவற்றினது பேதத்தின்கண் பிரத்தியக்ஷப் பிரமாணம் சம்பவியாது.

பிராணனையும் பிரஞ்ஞையையும் நாமாதி பன்னிரு விஷயங்களும் பரஸ்பரம் அபேக்ஷையுடையனவேயாம். ஆதலின் அவ்விரண்டிற்கும் பரஸ்பரம் பேதம் சித்தமாவதில்லையாம். அவ்விரண்டிற்கும் பரஸ்பரம் பேத நிரூபணங்கூடாதாயின், அதிஸ்டான வடிவப்பிராணப் பிரஞ்ஞைகளோடு அவ்வாக்காதி இந்திரியங்களின் பேதத்தை எவ்வகையால் நிரூபித்தல் முடியும். கயிற்றினின்றும் கற்பித சர்ப்பம் பின்னமாகாததுபோலப் பிராணப் பிரஞ்ஞை வடிவ ஆன்மாவினின்றும் கற்பித வாக்காதி இந்திரியங்களும் பின்னமாகமாட்டா, என்பது கருத்தாம்.

உபநிடதங்களில் துயிலின்கண்ணே மாயாவிசிஷ்ட பரமான்மாவின்கண்ணே அந்தக்கரண வாக்காதி இந்திரியங்கட்கு இலயம் கூறப்பட்டிருக்கிறது. இங்கு அதற்கு பிராணன் இடத்தே சர்வ வாக்காதி இந்திரியங்கட்கும் இலயம் கூறியுள்ளது. சுருதிகட்கு விரோதமே எனின், உறக்கத்தினின்றும் எழுந்த புருஷன் "யான் ஒன்றும் அறிகிலேன்"—என நனவின் கண்ணே இவ்வாறு சிந்திப்பன். இச்சிந்தனையின் கருத்தாலோ, மாயாவிசிஷ்ட பரமான்மாவின் கண்ணே சகல வாக்காதி இந்திரியங்கட்கும் இலயம் சித்தமாம். சுழுத்தியவஸ்தையின்கண் பிராணனது இலயத்தை உலகோர் அங்கீகரிப்பதின்ரும்! மற்ருே பிராணனைவிடுத்து, அந்நிய சர்வ வாக்காதி இந்திரியங்களின் இலயத்தை சுழுப்தியவஸ்தையின்கண்

உலகோர் அங்கீகரித்துள்ளார். ஆகையால் உலகோரின் அபிப்பிராயத்தை அங்கீகரித்துச் சுருதியானது. பிராணனிடத்தே சர்வ வாக்காதி இந்திரியங்கட்கும் இலயத்தை கூறியுள்ளது. ஆகையினுல் பிராண சப்தத்தின் இலக்ஷுணுவிருத்தியினுல் மாயா விசிஷ்ட பரமான்வையே கொள்க.

சிவமயம்

பரமான்மாவினது இலக்கணம்

பரமான்மாவைச் சத்தியம், ஞானம், ஆனந்தம், பிரஹ்மம், என்பதாதி சுருதிவாக்கியங்களின் விசுவாசத்தால் மதிமான்களாய புருஷர் அந்நிர்க் குணப் பரமான்மாவை அறிவதற்கு யோக்கியராவர்.

இப்போது—விதிமுக வாக்கியம் நிஷேதமுக வாக்கியம் ஆகிய இரண்டினையும் இலக்ஷணத்தோடும் உலகப்பிரசித்தம் ஆகிய திருஷ்டாந்தங்களோடும் நிருபணம் செய்வாம். இவ்வானந்த சொரூப ஆன்மாவைப் போதிக்கும் பொருட்டு வேதங்களுக்கு இருவகையாய பிரவிர்த்தியுண்டாம். அவற்றுள் ஒன்றே விதிமுகமாய்ப் பிரவிருத்தியாம்! மற்றென்றே நிஷேதமுகமாய்ப் பிரவிருத்தியாம். இவ்விரண்டும் அதிகாரிகளின் மதியானுசாரமாய் ஆம்! இப்போது விதிமுக உபதேசத்தைக் காண்பிப்பாம்—ஒரு தனிகனுனவன் பசுவின் சாலைக்கு சென்று, கோபாலனை நோக்கி எனது பசுவானது யாது என வினவில், அக்கோபாலனுனவன் அப்பசுவினது கொம்பைப்பிடித்து, இதுவே தங்களுடைய பசுவென அத் தனிகனுக்குக் காண்பிப்பான். இதனைச் சிருங்க கிராகிகா நியாயமென்பர். இங்ஙனம் இந்நியாயத்தால் ஆன்மாவைச் சாஸ்திரங்கள் போதிப்பிக்குமோ அதனை விதி சாஸ்திரமென்பர். உனது

கையில் நெல்லிக்கனி உளது என்னும் இது லௌகிக விதி வாக்கியமாம். இங்ஙனம் யாதொரு விதிவாக்கியமும், சொரூப ஆன்மாவைப் போதியாவாம். ஏனெனின் இவ்வான்மாவானது மனம், வாக்குகளுக்கு கோசரமாகாது. ஆதலினால், சத்தியம், ஞானம், ஆனந்தம், பிரஹ்மம் என்பதாதிவிதி வாக்கியங்களும் அசத்தாயுள்ள பொருள்களின் நீக்க வாயிலாகவே சுத்த ஆன்மாவின்கண் அறியப் பிரவர்த்தியுண்டாம்.

இப்போது நிஷேதமுக சாஸ்திரத்தை இலக்ஷணத்தோடும் லோகப் பிரசித்தமாயுள்ள திருஷ்டாந்தத்தாலும் காண்பிப்பாம். மயங்கிய புருஷர் இலக்ஷிய ரூபமாய் அங்கீகரித்த அநேகம் பதார்த்தங்களை நிஷேதித்து எஞ்சியதாய், உண்மையாய் இலக்ஷிய பதார்த்தத்தை எச்சாஸ்திரம் அர்த்தத்தால் போதிப்பிக்குமோ அதனை நிஷேத சாஸ்திரமென்பர். தேர், குதிரை முதலிய பலவகையாய சேனைகளோடு கூடிய ஒரு அரசனை அறியாமல் ஒரு மூட பாலகன் தன் தந்தையை நோக்கி இக்கூட்டத்தின் கண்ணே அரசன் யாவன் எனக்கேட்டான். அப்பாலகனது வசனத்தைக் கேட்டு, அவன் அப்பாலகனுக்கு அரசனையறிவிக்கும் அவாவினனான அவன் தந்தை முதலில் இவன் அரசன் என்னும் வசனத்தைக் கூறான். மற்றோ இப்பாலகன் பொருட்டு முதலிலேயே இவன் அரசன் என்னும் வசனத்தை யான் கூறுவேனாயின் இப்பாலகன் மூடனாதலின் அந்நியமாயுள்ள எவரையேனும் அல்லது அவனது குடை சாமரம் முதலிய எவற்றையேனும் அரசன் என அறிவனாதலின் இவன் அரசன் என்னும் வசனத்தை முதலில் பாலகனுக்குக் கூறல் தகுதியன்றாம். மற்றோ அரசனின் வேறாய சர்வ பதார்த்தங்களையும் யான்

நிஷேதிப்பேனுயின், எஞ்சியதாய் யாவற்றினும் வேரு யுள்ள இவ்வரசனே தானே அறிந்து கொள்வன் என மனத்தின் கண்ணே சிந்தித்து, அத்தந்தையான வன் அப்பாலகனுக்குக் கூறுவானுயினுன். ஹே மைந்தா காணப்பட்ட இம்மரமும் அரசனன்ரும்! இக் குதிரையும் அரசன் அன்ரும்! இவ் யானேயும் அரசனன் ரும்! இத்தேரும் அரசனன்ரும்! இக்காலாள்களும் அரசன அன்ரும்!

பலவகையான ஆயுதங்களேத் தரித்திருக்கும் புரு ஷரும் அரசனன்ரும்! இவ்வெண் குடையும் அரச னன்ரும்! இக்குடை சாமரம் கையில் வைத்திருக்கும் ஆடவர் மாதர்கள் ஆகிய இவர்களும் அரசனன்ரும்! இந்நீலச் சட்டை யணிந்த புருடனும் அரசனன்ரும்! இம்மஞ்சள் சட்டை யணிந்த புருடனும் அரசனன்ரும்! இச்சித்திர ஆடை யணிந்தவனும் அரசன் அன்ரும்! இச் சிகப்பு சட்டை அணிந்த புருடனும் அரசனன்ரும். இச்சுவர்ண மயவாள் ஆயுதம் தரித்த புருடனும் அரச னன்ரும்! இச்சுவர்ணமய வில்லேயுடைய புருடனும் அரச னன்ரும். என்பன வாதி வசனங்களால் அரசனுக்கு வேருகிய சர்வ பதார்த்தங்களேயும் நிஷேதம் செய் தனன். அதன் பின்னர் அப்பாலகன் எஞ்சிய தாய் யாவற்றினும் வேருயுள்ள அரசனேக் கண் கூடாய்க் கண்டனர்.

அவ்வரசனுனவன் பொன் போன்ற காந்தியை யுடையவனுய் அவன் மேனி காணப்பட்டது. அவனது சிரசிற்கு மேல் வெண்குடை யுடையவனுய் இருந்தான். பக்கங்களில் நின்ற சேடியர்களின் கைகளாகிய கமலங் களில் சுழல்கின்ற சாமரமாகிய அன்னப் பறவையால் சேவிக்கப்பட்ட மஸ்த்தகத்தோடு கூடி விளங்கினன்.

வெண்மையாய ஆடையை அணிந்திருந்தனன். திவ்ய மாய காந்தியோடு கூடித் திகழ்ந்தனன். அத்தகைய அரசனை எல்லாச் சேனையினும் வேருய் அப்பாலகன் கண்ணுற் கண்டனன். இவ்வண்ணம் நிஷேத சாஸ்த்திரமும் ஆன்மா ஒன்றை மாத்திரம் விட்டு வேருய ஸ்த்தூல சூக்குமச் சர்வப் பிரபஞ்சங்களையும் நிஷேதிக்கும். அந்நிஷேதத்தின் பின்னர் அவ்வதிகாரியானவன் சர்வப் பிரபஞ்சத்தினும் விலக்ஷண ரூபமாய் ஆன்மாவைத்தானே நிச்சயஞ் செய்வன். ஆகையால் இந் நிஷேதமுக உபதேசமே, ஆன்மாவைப் போதிப்பதில் மேன்மையான உபாயமாம். இன்னிஷேதமுக உபதேசத்தை அங்கீகரியாவிடின் உண்மை இன்மை அற்ற நிர்குண பரமான்மாவை யாது போதிப்பிக்கும். மற்ருே நிஷேதமுக உபதேசமின்றி, நிர்க்குண பரமான்மாவை உணர்த்துவதில் எவ்வாக்கியங்களும் சமர்த்துடையதன்ரும். ஆகையினுல், மகா வாக்கியத்தின் லக்ஷிய ரூபமாய அத்வீதிய ஆத்மா, மனம், வாக்குகட்கு எட்டாததாம். சப்தத்தின் பிரவிர்த்திக்கு நிமித்தமாய் ஜாதி, குணம், கிரியை, முதலியவை யற்றதாம். ஆகையினுலே சத்தியமாய வேத வாக்கியங்களும் அவ்வான்மாவை நேரே போதிப்பிக்கும் ஆற்றல் உடையது அன்ரும். அத்தகைய அத்விதீய ஆன்மாவை யாவன் மனத்தால் விஷயஞ் செய்வன்; மற்ருே எவனும் மனத்தால் ஆன்மாவை யறிவதில் சமர்த்தனுகான். அத்தகைய அத்வீதிய ஆத்மாவை அறிவிக்கும் பொருட்டு நிஷேத சாஸ்த்திரம் ஸ்த்தூல சூக்ஷமருப சர்வஜகத்தையும் நிஷேதஞ் செய்யும்போது, அவ்வானந்த சொரூப ஆன்ம தேவர் தாமே அதிகாரிகளின் இருதய தாமரையின் கண்ணே பிரகாசிப்பர். தீபம் இல்லின் கண்ணே அடைந்து நேத்திரங்களை மறைப்பதாய

அந்தகார நிவர்த்தியை மாத்திரஞ் செய்யும் இவ்வளவே தீபத்தின் உபயோகமாம். அந்தகாரம் நீங்கிய பின்னர் கண்ணுடையோன் சுதந்திரமாயே கடபடாதிகளைக் காண்பன். அதுபோல இவ்வுண்மை இன்மை ரூப காரிய காரண ஸ்த்தூல சூக்ஷூம ரூப சம்பூர்ண ஜகத்தானது. ஆன்மாவன்றும் என நிஷேதமுக சாஸ்திரங் கூறின், அதிகாரியானவன் தானே ஆன்மாவை சாக்ஷாத்கரிப்பன். ஆகையால் அத்விதீய ஆன்மாவை உணர்வதற்கு இந்நிஷேதமுக உபதேசமே மேலானதாம். ஏனெனில் விதிமுக உபதேசத்தின்கண் தத்துவம் பதார்த்தங்களின் சோதனையும் அபேஷையும். அது மனுதிகளின் அபேக்ஷையும் மிகையாம். அது போல நிஷேதமுக உபதேசத்தின்கண் எவ்வநுமானுதிகளின் அபேக்ஷையுமின்ரும். இதுவன்று, இதுவன்று என்று கூறிய சுரிதியானது ரூப்பமும் அருபமுமாயுள்ள பிரபஞ்சத்தை நிஷேதிக்கும். அவ்விரு வகையாய பிரபஞ்சத்தினின்றும் வேருயுள்ள ஜட பதார்த்தங்களைச் சுருதி நிஷேதஞ் செய்யவில்லையாதலின் அப்பதார்த்தங்களோடு ஆன்மாவிற்கு அபேதமாய் அத்தியாச முண்டாவதால் அதிகாரிக்குச் சுத்த ரூபமாய் ஆன்மாவின் விளக்க முண்டாகாதன்ருே;

எனின், காரண அஞ்ஞானத்தோடு கூடிய ரூப அருபமாயுள்ள யாதொரு பிரபஞ்சமோ, அது ஜடப்பிரபஞ்சமாம். அதனினும் அதிகமாய வேறு யாதொரு ஜடப்பிரஞ்சமுமின்ரும். இக்காரண அஞ்ஞான சகித ரூப அருபப் பிரபஞ்சத்தை நிஷேதஞ் செய்வதினுலே, அறிஞனுக்கு ஆன்ம சாக்ஷாத்காரமுண்டாம். ஆதலினுல் இது அன்று இது அன்று என்னும் சுருதியானது அத்விதீய ஆன்மாவினும் வேருய சர்வ சடப்பிரபஞ்சத்

தையும் நிஷேதம் செய்யும் இன்று என்னும் முதற்பதம் காரிய காரணமாயுள்ள தூல சூக்கும ரூபமாயுள்ள பிரபஞ்சத்தை ஆன்மாவின்கண் நிஷேதம் செய்யும். இன்று என்னும் இரண்டாவது பதம் உண்மை இன்மை ரூப ஜடப்பிரபஞ்சமானது ஆனந்த சொரூப ஆன்மாவினின்றும் நீங்கவே இவ்வானந்த சொரூப சொப்பிரகாச ஆன்மாவே எஞ்சி விளங்காநிற்கும். அக்கினியின் விசேஷ பாவத்தின் காரணமாய காஷ்டமானது அக்கினியால் தகிக்கப்படவே விறகின்றிய அவ்வக்கினியானது பூர்வ விசேஷ ரூபபாவத்தை விடுத்து தனது சாமான்ய ரூபத்தில் நிலைபெறும்! அதுபோல ஆன்மாவின் விசேஷ ரூபத்தின் காரணமாய உண்மை இன்மை ரூப ஜடப்பிரபஞ்சமானது. நீக்கப்படவே இவ்வானந்த சொரூப ஆன்மாவும் உபாதியால் உண்டாய விசேஷ ரூபத்தை ஒழித்துத் தனது சச்சிதானந்த சொரூபத்தின் கண்ணே நிலைபெறும்! இது யாம்! இது நீர்! இது காணப்பட்ட உலகம்! இவர் அன்னிய ஜீவர் என்னும் எல்லாப் பேதங்களும் ரூப அரூபமாயுள்ள உபாதியால் உண்டாயதேயாம். ஆகையால் இவ்வெல்லாப் பேதங்களும் ஆனந்த சொரூப ஆன்மாவின்கண் உண்மையில் இல்லாததேயாம். பேதமில்லாத ஆகாசத்தின்கண் புகை, மின்னல், மேகம் என்பவை பலவகையாய பேதத்தை உண்டுபண்ணும்! அங்ஙனமே பேதமற்ற ஆனந்த சொரூப ஆன்மாவின்கண்ணே, தூல சூக்கும சரீரங்கள், பலவகையாய பேதங்களை உண்டாக்கும். ஆகாசத்தின்கண்ணே பேதத்தைச் செய்வனவாய மேகாதிகட்கு உபாதான காரணம் ஆகாசம் அன்றாம். அதுபோல ஆன்மாவின்கண்ணே பேதத்தைச் செய்யாநின்ற தூல சூக்குமப் பிரபஞ்சங்கட்கு ஆன்மாவே உபாதான காரணமாம்.

அசங்கமாய ஆன்மாவின்கண் ஜகத்தின் காரணத் தன்மை சம்பவியாது எனின், அசங்கமாய ஆன்மாவின் கண் ஜகத்தின் காரணத் தன்மை. சம்பவியாதென்னும் வார்த்தை உண்மையேயாம். அசங்கமாய ஆன்மாவின் கண்ணே ஜகத்தின் காரணத்தன்மை. யாமும் அங்கீ கரிப்பதில்லை. மற்ருே மாயாவிசிஷ்ட பரமான்மாவின் கண்ணேயே ஜகத்தின் அபின்ன நிமித்தோபாதான காரணத் தன்மையை யாமும் அங்கீகரித்திருக்கின் ருேம். ஆகையினுல் தூல சூக்குமரூப சம்பூரணப் பிரபஞ்சமும் மாயா விசிஷ்ட பரமேஸ்வரன் மாயை யினுல் ஆக்கப்பட்டமையால், சம்பூரணப் பிரபஞ்சமும் பொய்மையேயாம்! இந்திரஜாலம் பண்ணுவோன், தனது சத்தியால் ஆக்கிய பொருள்கள் யாவும் உருவ மாயுள்ளது. அப்பொருளைத் தோற்றுவித்த ஜால வடிவ சக்தி, அரூபமாயும் உள்ளது. அங்ஙனமே மாயா விசிஷ்ட ஈசுரன் மாயையால் தோற்றுவித்த பொருள்கள் உருவமாயுள்ளது. அப்பொருளைத் தோற்றுவித்துள்ள மாயை அரூபமாயுள்ளது! அவ்விந் திரஜாலிகனுக்கு அவனது ஜாலசக்தியும் அதனுல் ஆக்கப்பட்ட பொருளும் எப்படிப் பொய்யாயுள்ளதோ இந்திரஜாலிகன் ஒருவனே மெய்மையாமோ. அது போல மாயா விசிஷ்ட பரமான்மாவினுக்குத் தனது மாயையும் அதனுல் ஆக்கிய பொருளும் பொய்மையே யாம். மாயாவிசிஷ்ட பரமான்மாவே உண்மைப்பொரு ளாம்! பொய்மையாய் தோற்றும்; அவைகள் அனைத் தும், மாயைக்கு வேருகவில்லை. அம்மாயையும் பரமான் மாவிற்கு வேருகவில்லை. எங்ஙனம் கனுப் பொருள்கள் அனைத்தும் அக்கனுக் கண்ட புருஷனுக்கு வேருக இல்லை. அவனது சொரூபமே யாம். அதுபோலவும் சித்திரம் எழுதுவோனுக்கு எழுதும் சக்தி அவனுக்கு

வேருக இல்லே. அதுபோலவும் கயிற்றின்கண் தோற்றும் பாம்பு அது தோற்றுவதற்கு முன்னும் தோற்றிய பாம்பு இல்லே என அறிந்த பின்னரும் அது தோற்றிக் கொண்டிருக்கும் காலமாகிய மூன்று இடத்தும் கயிராகவேதான் உள்ளது. அப்பாம்பின் தோற்றமானது கயிற்றிற்கு வேருக இல்லே. அதுபோலவே பரமான்மாவிற்கு வேருக யாதுமே இல்லே.

அது எங்ஙனம் எனில் நனவு கனவுகளில் தோற்றுகின்ற நராநாவாகிய தோற்றங்கள் யாவும் சுழுத்தியவஸ்தையின்கண் உண்டா! அங்கே யாதொரு தோற்றமும் இல்லே! ஒன்றும் தெரியவில்லே. சுகமாய் உறங்கினேன் என்பது உலகப் பிரசித்தம். இதுவேதான் உண்மைநிலே நனவு கனவுகளின் தோற்றம் உண்மை ஞானம் உண்டாம் வரையுமுள்ளது. உண்மை உணர்ந்தபின் அத்தோற்றங்கள் உளவாகா! கனவிற் தோன்றியன யாவும் நனவின்கண் பொய்மையாவது போலவாம். கடலின்கண் தோன்றிய அலே திவலே குமிழிகள் யாவும் அக்கடலிற்கு வேருகாததுபோல பரமான்மாவின்கண் தோன்றிய சராசரப் பொருள்கள் அனேத்தும் அதற்கு வேருக மூன்று காலத்துமில்லே. சுருதி "ஏகமே வத்துவிதம்" என்னும் சுருதியின்படியே பரமான்மா ஒன்றே சத்தியம்! ஈண்டு நாநாவென்பது சிறிதுமில்லே.

எமது அன்புள்ள உயர்திரு ஜேம்ஸ்கிட் என்பவர்கள் வினவிய உயிரினது இலக்கணத்தையும் அது தங்குமிடத்தையும் அது சென்ற நிலேயினேயும் ஆதாரபூர்வமாகக் காட்டவேண்டுமென்ற விளுக்களுக்கு பதில் விடைபகருமாறு எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணே ஆண்டவனே இவன் மாநுட

வடிவமாய் நீலகண்டன் என நாமம் கொண்டு வந்துள்ள அருள்வள்ளல் எமக்களித்த மதியின் அளவினதாய் சுருதியும் யுக்தியும் அநுபவமுங்கொண்டு இதற்கு விடையெழுதப்பட்டது! வித்தைகளுள் மேலானது பிரஹ்மவித்தையாம். இதனை சபையோர்க்கஞ்சாமல் பதில் எழுதுமாறு எமக்கு ஊக்குவித்துள்ள பரம்பொருளுக்கும் எழுதுவதற்கு ஏதுவாகக் கிடைத்துள்ள அன்பர் ஜேம்ஸ்கிட் என்பவர்கட்கும், என்ன கைமாறு செய்யத் தக்கது. செய்துள்ள நன்றியைப் பாராட்டுவதே நமது கடமையாகும்.

ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஸ்ரீ சற்குருப்யோ நம:
பிஹ்ம. நிஸ்ட்ட. பண்டித
ஸ்வாமி, நித்தியானந்தா அவர்கள்
வேட்டைக்காரன் புதூர், பொள்ளாச்சித் தாலுகா
கோவை ஜில்லா, சென்னை மாகாணம்.

அண்ணாமலையார் துணை அன்பே சிவம்.

அச்சிட்டோர்: ராஜம் பிரிண்டர்ஸ் சென்னை—5